செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

நாள் : **19.07.2024**

# தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் வேந்தன்

**பயிலரங்கம் – 9**
**(07.08.2024 – 13.08.2024)**

உலக மாந்தர் வரலாற்றில் சமவெளிப் பகுதிகளைக் கொண்ட ஆற்றங்கரைகளில் மனித நாகரிகம் தோன்றியது என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். நீர் நிலைகளின் அருகில் வாழத் தொடங்கிய மனிதசமூகம் உணவு உற்பத்திநிலைக்கு மாறி நிலவுடைமைச் சமுதாயமாக வளர்ச்சி பெற்றது. தன் உற்பத்தித் திறனைப் பெருக்கிக் கொள்ள குளங்களையும் ஏரிகளையும் உருவாக்கித் தன் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துகொண்டது மனிதசமூகம். இவ்வாறு இயற்கையோடு இயைந்த மக்களின் வாழ்வியல் அடிப்படையில் *முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்* எனத் தொல்காப்பியர் நான்கு நிலப்பிரிவுகளைக் குறிப்பிட்டுள்ளார். இதில் வயலும் வயல்சார்ந்த இடமான மருத நிலத்தைக் குறிக்குமிடத்து **“வேந்தன் மேய தீம்புனல் உலகம்”** (அகத்திணையியல் 5) என்று வேந்தனை மருதநிலத் தலைவனாக முதன்மைப்படுத்துகிறார் தொல்காப்பியர். இதன் தொடர்ச்சியாக மருதநிலத் தலைவனான வேந்தன் பிற்காலத்தில் இந்திரனாக அழைக்கப்படுகிறான். அந்நாளில் இந்திரன் உலக உயிர்களை உயிர்ப்பிக்கும் மழைக்குரிய கடவுளாகச் சித்தரிக்கப்படுகிறான். இதன் தொடர்ச்சியாக மருதநில மக்கள் தாம் விளைவிக்கும் பயிர்களைக் காக்கும் கடவுளாகக் கருதி இந்திரனை வழிபட்டனர்.

மருதநில மக்களின் வாழ்வாதாரத்தைக் காக்கும் கடவுளான இந்திரன் ரிக் வேதத்தில் வீரம் மிக்கவனாகவும், வெற்றிச் சிறப்புடையவனாகவும் பெரும்பாலான இடங்களில் புகழ்ந்து பேசப்படுகிறான். தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் தொல்காப்பியம் தொடங்கி இன்றுவரை இந்திரன் குறித்த குறிப்புகள் பல இடம்பெற்றுள்ளன. ஐங்குறுநூற்றின் மருதத் திணையில் **“இந்திர விழவிற் பூவி னன்ன புன்றலைப் பேடை வரிநிழ லகவும்”** (ஐங்குறுநூறு 62) என்ற பாடலடிகளிலிருந்து இந்திர விழாவில் கலந்துகொள்ள வருபவர்கள் வெவ்வேறு வகையான மலர்களைச் சூடியிருந்தனர் என்ற செய்தியை அறியமுடிகிறது. மேலும்,

**அண்டிரன் வரூஉ மென்ன வொண்டொடி**
**வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுட்**
**போர்ப்புறு முரசங் கறங்க** (புறநானூறு 241)

என்ற புறநானூற்றுப் பாடலடிகளில் இந்திரன் அணிந்திருந்த தொடி, வச்சிராய்தம் ஏந்திய நீண்ட பெரிய கை, இந்திரனுக்கு அமைந்த கோவில் ஆகிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இதன்வழி மருதநிலத் தலைவனான இந்திரனுக்கு கோவில் அமைத்து வழிபட்ட செய்தியை அறியமுடிகிறது. சிலப்பதிகாரத்தின் **"இந்திர விழவூரெடுத்த காதையில்"** இந்திரவிழா குறித்தும் அவ்விழாவின் சிறப்பு குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகச் சீத்தலைச்சாத்தனார் மணிமேகலையில் **"தீவக சாந்தி செய்தரு நன்னாள்"** என்று இந்திர விழாவைக் குறிப்பிடுகின்றார். மேலும் பரிபாடல், திருமுருகாற்றுப்படை, நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், காப்பியங்கள், பள்ளு இலக்கியங்கள் எனத் தமிழ் இலக்கியப்பரப்பில் இந்திரன் குறித்த செய்திகள் விரவிக்கிடக்கின்றன. தமிழர் வழிபாட்டு மரபில் நெடுங்காலமாக இருந்துவரும் மருதநிலத் தெய்வமான இந்திரனின் சிறப்புப்பற்றியும், இந்திர விழா குறித்தும் ஆய்வு மாணவர்களுக்கு விளக்கும் வகையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் **"தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் வேந்தன்"** என்னும் பொருண்மையில் ஏழு நாள் **(07.08.2024 – 13.08.2024)** பயிலரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கில் இந்திர வழிபாட்டின் தொன்மை, இந்திர விழாவின் சிறப்பு, அதன் தொடர்ச்சி குறித்துப் பேரறிஞர்கள் ஆய்வுரை நிகழ்த்த உள்ளனர். தமிழரின் வழிபாட்டு மரபு குறித்து ஆய்வு மேற்கொள்ளும் தமிழியல் மாணவர்கள் (முனைவர் பட்ட ஆய்வாளர்கள்) இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம்.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - **30**
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **07.08.2024** முதல் **13.08.2024** முடிய ஏழு நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை **10.00 - 1.00** & மாலை **2.00 - 5.00.**
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின் படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழி விண்ணப்பத்தை நிறைவு செய்து இணையத்தின் வழி அனுப்பவும்.
- இணையவழி விண்ணப்பம் https://forms.gle/mx37kiv5ky2LVabWA என்ற இணைப்பின் வழியாக அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR-code) மூலமாக கிடைக்கப்பெறும்.

- பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **31.07.2024** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **01.08.2024** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் **26** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டது.

**இயக்குநர்**